முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மிருகண்டரிஷி அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

21.10.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **கடைத்தேற்றம் அருள கந்தனே**
**கருணை கொண்டு அரங்கனாக**
**சோடை போக்கி மக்களை நோக்கி**
**சூட்சும சக்தியாக வந்தருள**
2. அருளவே அரங்கனே கலியுக
ஆறுமுகன் அவதார சக்தி
அருள்பெற உலகோர் எல்லாம்
அழியாமை பெறுவரெனக் கூறி
3. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி துலை திங்கள்**
**தெரியவே சதுர் திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 4ம் நாள் 21.10.2018, ஞாயிற்றுக்கிழமை)**
**தேசிகனுக்கு மிருகண்டரிஷி யானும்**
4. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான தலைவனாக வந்த
ஞான தேசிகனின் உபதேசமே
ஞான வழிகாட்டும் ஞானமாகும்
5. ஆகவே ஞானம் ஞானம் என
அலைந்து எட்ட முடியா தவிக்கும்
யுகமக்களே சற்று கவனியுங்கள்
உங்களை தேற்றவே ஞானிகளின்
6. ஞானிகளின் கலவையாக வந்து
ஞானிகள் பூசை செய்து அழைக்கும்
ஞானியரின் சக்திக்கு மேலான
ஞானம் தரும் உயர்நிலை வேறெங்கும்
7. வேறெங்கும் இல்லை மக்களே
வினவிடுவேன் அன்னதனால் உடன்
அரங்கன் பிரணவக் குடிலை
அணுகி முழுமதி பூசை கலந்து
8. கலந்து ஆசி தீட்சை அடைந்து
கனிவு தரும் தரும சேவையிலும்
கலந்து தொண்டுகள் புரிந்து
கர்மவினை போக்கி செயல்பட

9. செயல்பட தயவு பெருக பெருக
சிந்தை தெளிவு சீவனுள் இறை
தயவாக இருக்கும் சூட்சுமம் விளங்கி
தசவாசல் உணர்வும் பலமும்

10. பலமான ஞானமும் திடமும்
பரமானந்த கதிநிலை எளிதாய்
இலகுவாய் அடைய நேரும்
ஏழாம் படை வீட்டு அரங்கன் தொடர்பை

11. தொடர்பை கூட்ட ஞானபலம்
தேசமெங்கும் பரவி நின்று
இடரில்லா ஞான யுகமதும்
இயம்பிடுவேன் சடுதி அமையும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் மிருகண்டரிஷி அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலக மக்களின் அறியாமையை போக்கி அவர்களை கடைத்தேற்றி அருள் செய்திடும் பொருட்டு முருகப்பெருமானே உலக மக்களின் மீது அளவிலாத கருணை கொண்டு ஆறுமுக அரங்கமகா தேசிகனாக அவதரித்து மக்களின் குற்றம் குறைகளை போக்கி மக்களுக்கு சூட்சும சக்தி வடிவில் நின்று அரங்கனைச் சார்ந்து அருள் செய்து அருளி நிற்கின்றார் முருகப்பெருமான். ஆதலினால் முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனே இந்த கலியுகத்தின் முருகப்பெருமான் ஆவார். முருகப்பெருமானின் அருளைப் பெற முருகப்பெருமானின் அவதார சக்தியான அரங்கனின் அருளைப் பெற வேண்டும். ஆறுமுக அரங்கனின் அருளைப் பெற உலகோர் எல்லாம் அழியாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வை பெறுவார்கள். அத்தகைய அளவிலா ஆற்றலுடைய முருகப்பெருமானின் அவதாரம் அரங்கனின் புகழினை உலகமெலாம் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 4ம் நாள் 21.10.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே மிருகண்டரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மிருகண்டரிஷி.

இந்த உலகின் யுகமாற்ற தலைவனாக உயர் ஞான குருவாக மேன்மைமிக்க ஞானத்தலைவனாக வந்துதித்திட்ட ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் உபதேசமே இவ்வுலகினருக்கு ஞானவழி காட்டும் ஞானமாகும். ஆதலினாலே உலகினில் ஞானம், ஞானம் என்றே ஞானத்தினைத் தேடி அலைந்து திரிந்து தவிக்கின்ற மக்களே எங்கு அலைந்து திரிந்தாலும் ஞானத்தினை அறிய முடியாமல் தவிக்கின்ற மக்களே சற்றே கூர்ந்து யான் கூறுவதை கவனியுங்கள்.

"உங்களைத் தேற்றவே உலக ஞானிகளின் கலவையாக அவதாரம் செய்தவர்தான் அரங்கமகா தேசிகன்" உலக மகா ஞானிகளின் கலவையாக வந்துதித்த அரங்கமகா தேசிகனார். நீங்கள் ஞானிகள் பூசை செய்து அழைக்கும் ஞானிகளின் சக்திக்கு மேலான வகையில் ஞானம்தனை அருளும் உயர்வான நிலை அரங்கனிடத்து தவிர வேறெங்கும் இல்லையப்பா.

ஆதலினாலே உலக மக்களே உங்களுக்கு ஒன்று உறுதியுடன் சொல்லுகிறேன். நீங்கள் ஞானம் அடைய விரும்பினால் உடன் விரைந்து ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வருகை தாருங்கள். ஆங்கே உலக நலன் கருதியே ஓங்காரக்குடிலினை அமைத்து

அருள்பாலிக்கும் ஆறுமுக அரங்கன் உலக நலன் கருதி சித்தர்களையும், சித்தர்கோன் அகத்தியரையும் முருகப்பெருமானையும் தலைமையேற்க நடத்துகின்ற பௌர்ணமி சிறப்பு ஞான பூஜையேற்க நடத்துகின்ற பௌர்ணமி சிறப்பு ஞானபூஜைகளிலே கலந்து கொண்டு அரங்கனை தரிசனம் செய்து ஆறுமுக அரங்கமகா தேசிகனிடத்து பயபக்தியுடன் பணிந்து தீட்சை உபதேசம்தனை அடைந்திடுங்கள். தீட்சை பெற்று ஆங்கே உலக நலன் கருதி அரங்கன் நடத்துகின்ற தானதருமப் பணிகளிலே தவறாது பொருளுதவிகளையும் தொண்டுகளையும் செய்து உங்களது கர்மவினைகளை போக்கி செயல்புரியுங்கள்.

ஓங்காரக்குடிலாசான் அரங்கனைச் சார்ந்து ஓங்காரக்குடிலைச் சார்ந்து தொண்டுகளும் பொருளுதவிகளும் செய்து செயல்பட செயல்பட, உங்களுள் தயவு பெருகிடும். உங்களுள் தயவு பெருக பெருக சிந்தை தெளிவு பெறும், சிந்தை தெளிவு பெற பெற, உங்களுள் ஆன்மாவில் இறைவன் தயவாக இருக்கின்ற பேருண்மையான சூட்சுமம் உங்களுக்குள் விளங்கி, தயவே, அன்பே, கருணையே இறைசக்தியாக இருப்பதும் விளங்கிடும். தயவு எனும் ஜீவதயவே ஞான வீட்டின் திறவுகோலாகவும் உள்ளதும் தெரியும்.

ஜீவதயவு பெருக உள்ஞானம் பெருகி இறை உணர்வும் பெருகி மரணமிலாப் பெருவாழ்வின் சூட்சுமமும் விளங்கி தசவாசலான பத்தாம் வாசலாகிய புருவமத்தியினை பற்றிய ரகசியமும், அதைத் திறந்து வெற்றியடைந்தால் ஞானம் பெறலாம் எனும் உணர்வும், பலமும் பெருகி, ஞானமும் திடமும் உண்டாகி, கிடைப்பதற்கரிய பரமானந்த நிலை தயவின் துணையாய் எளிதாய் இலகுவாய் அடைந்திடலாம்.

ஏழாம் படை வீடு நாயகன் ஓங்காரக்குடில் தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தொடர்பை அதிகரிக்க அதிகரிக்க அவர்களுக்கு ஞானபலம் பெருகிடும். உலகோர் அரங்கனை அதிகமாக நாடி செல்ல செல்ல, அரங்கனின் அருள் தேசமெங்கும் பரவி நின்று துன்பம் இல்லாத ஞானயுகமதும் உலகினில் விரைந்து உருவாகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் மிருகண்டரிஷி.

–சுபம்–